www.shaivism.org

தலம் திருவதிகை
பண் கொல்லி
நான்காம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் (1) கேஇர வும்பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற் றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடி யேன் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

நெஞ்சம் உமக் கேயிட மாகவைத்தேன் நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம் இது வொப்பது கண்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை நணுகாமல் துரந்து கரந்துமிடீர் (2)
அஞ்சேலுமென் னீர் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர் படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால் சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர் பெற்றமேற்றுகந் தீர்சுற்றும்
வெண்டலைகொண் ( டு )

அணிந்தீர் அடி கேள் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

முன்னம் அடி யேன் அறி யாமையினால் முனிந்தென்னை நலைந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன் சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யார் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையாற் கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தை இது வொப்பது கேட்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லார் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன்னாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய் உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடி யேன் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும் ஒருவர்தலை காவ
லிலாமையினால்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால் வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேஎன் வயிற் றி னகம்படியே பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன் அடி யேன் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன் வஞ்சம்மன மொன்று
மிலாமையினால்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச் சங்கவெண்குழைக் காதுடை

எம்பெருமான்

கலித்தேஎன் வயிற் றி னகம்படியே கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன் அடி யேன் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

பொன்போல மிளிர்வதோர் மேனியினீர் புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை நணுகாமல் துரந்து கரந்துமிடீர் (3)
என்போலிக ளும்மை இனித்தெளியார் அடியார்படு வதிது வேயாகில்
அன்பேஅமை யும் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

போர்த்தாயங்கொ ரானையின் ஈருரிதோல் புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ் அடர்த்திட்டருள் செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண்டும் விழுந்தும் எழுந்தால் என் வேதனை யான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழ் அதி கைக்கெடில வீரட்டா னத்துறை அம்மானே

திருச்சிற்றம்பலம்

(1) ஏற்றாவடிக்
(2) கரந்தும் விடீர்
(3) கரந்தும் விடீர்

www.shaivism.org